**Source:** *Tamil Murasu,* Front Page & p3
**Date:** 4 July 2015

# சிறுபான்மை இன பிரதமர் சாத்தியமே

சிங்கப்பூர் அதன் ஐம்பதாண்டு காலப் பாதையைக் கடந்து வந்திருக்கும் நிலையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் நாட்டின் பிரதமர் ஆவது என்பது காலத்தைப் பொறுத்தது என்று துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம் தெரிவித்துள்ளார்.



> “தூரத்திலிருந்து பந்தை உதைத்துக் கொடுத்து கோல் போட உதவும் நான் கோல் போடுபவனாக இருக்கமாட்டேன்.
>
> **துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம்**

“சில நேரங்களில் சில விஷயங்கள் தவிர்க்க முடியாதவை. தகுதிக்கு முன்னுரிமை என்பதை நாம் பின்பற்றுவதால் இந்தியர், மலாய்க்காரர், யூரேஷியர் அல்லது கலப்பினத்தைச் சேர்ந்தவர் என சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதமர் ஆவது என்பது நமது அரசியல் நிலவனப்பில் இடம்பெறப் போகும் ஓர் அம்சம்.

“இது ஒரு வெளிப்படையான அமைப்பு முறை. இது காலப் போக்கில் நிகழக்கூடியதே,” என்றார் திரு தர்மன்.

சிங்கப்பூரின் பிரதமராக ஓர் இந்தியர் வருவாரா? என்னும் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

கொள்கை ஆய்வுக்கழகத்தின் SG50+ மாநாட்டில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது திரு தர்மனை வாஷிங்டன் போஸ்ட் செய்தியாளர் ஃபரீட் ஸக்கரியா பேட்டி கண்டார்.

சிங்கப்பூர் இனி எதிர்நோக்க இருப்பவை குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

சிறுபான்மை இன பிரதமரை சிங்கப்பூர் பெறுவது என்பது தவிர்க்கமுடியாத ஒன்று என்றார் திரு தர்மன்.

“சிங்கப்பூர் வளர்ந்து உருவெடுத்து வருகிறது. எல்லாரும் வளரக்கூடிய பொது இடம் என்பது நமது சுதந்திர காலத்திற்கு முன்போ அல்லது நமது தொடக்க காலத்திலோ இருந்ததைக் காட்டிலும் மிகவும் பெரியது.

“அனைவரும் கல்வி கற்றவர்களாக இருக்கும் சூழலில், ஆங்கிலம் முதல் மொழியாக இருக்கும் நிலையில், தேசிய சேவை மூலம் பொதுவான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் சூழலில், (சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதமர் ஆவது) காலப்போக்கில் நடக்கக்கூடியதே,” என்றார் துணைப் பிரதமர்.

பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதை ஏற்கமாட்டாரா என திரு தர்மனிடம் திரு ஸக்கரியா கேட்டபோது விளையாட்டை உவமையாகக் கூறினார் திரு தர்மன்.

“நம் எல்லாருக்கும் விருப்பங்கள் உண்டு. விளையாட்டை எடுத்துக்கொண்டால் நான் எப்போதும் மத்திய திடலில் விளையாடவே விரும்புவேன். கோல் போடுவதற்கு உதவியாக தூரத்திலிருந்து பந்தை உதைத்துக் கொடுப்பதை அனுபவித்துச் செய்வேன். ஆனாலும் நான் கோல் போடுபவன் அல்ல.

“நமக்குப் பல வாய்ப்புகள் இருப்பதால் நான் கட்டாயப்படுத்தப்படமாட்டேன் எனக் கருதுகிறேன். நாம் எதிர்பார்ப்பதுபோல எப்போதும் நடப்பதில்லை. ஆனாலும், சிங்கப்பூரின் தலைமைத்துவ மாற்றம் பற்றி மிகவும் கடினமாகச் சிந்திக்கிறோம்.

“எதிர்காலத் தலைமைத்துவத்தை வழங்க பலமாதிரியான மக்கள் நம்மிடம் இருப்பதோடு மேலும் பலர் வந்துகொண்டு இருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன்,” என்றார் திரு தர்மன்.

சிங்கப்பூரில் சிறுபான்மைச் சமூகத்தினர் பிரதமர் ஆக முடியுமா? எப்போது அது நடக்கும்? என்கிற கேள்வி அவ்வப்போது எழுந்து வருகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.

NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* Front Page & p3
**Date:** 4 July 2015

# திரு கோ: சிறந்த கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்

சிங்கப்பூரின் வாக்காளர்கள் தொடர்ந்து பகுத்தறிவுடனும் அறிவுத் திறனுடனும் இருக்க வேண்டும் எனத் தனது விருப் பத்தை ஓய்வு பெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோக் டோங் வெளிப்படுத்தியுள்ளார்.

சம்மதத்திற்கும் மகிழ்ச்சி யின்மையையும் இடையே எப்படி, எப்பொழுது அளவிடுவது, எதைத் தேர்ந்தெடுப்பது என்பதை வாக் காளர்கள் முந்தைய தேர்தல்களில் காட்டியுள்ளனர் எனவும் அவர் நேற்று குறிப்பிட்டார்.

'ஐம்பதில் சிங்கப்பூர்; அடுத்தது என்ன?' என்னும் தலைப்பிலான கலந்துரையாடலில் பேசியபோது திரு கோ இவ்வாறு குறிப்பிட்டார்.

சிங்கப்பூர் தொடர்ந்து வெற்றி பெற நாட்டைச் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லும் கட்சியாக எதை நம்புகிறார்களோ அதற்கு வாக்களிக்க வேண்டும் எனத் திரு கோ கூறினார்.

"நாட்டைச் சிறப்பாக வழி நடத்தக் கூடியவர்கள் அதற்கு முன்வரவேண்டும். மற்றவர்கள் அவர்களை ஆதரிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

"நாடு வெற்றியடைவதற்கான நமது ஒட்டுமொத்த நம்பிக்கையை அவர்கள் பிரதிநிதிக்கிறார்கள். அவர்களது நிலை கீழிறங்கினால் நாம் அனைவரும் கீழே செல்ல வேண்டியதுதான்," என்று திரு கோ தனது உரையின்போது குறிப்பிட்டார்.

"தேர்ந்தெடுக்கப்படும் பிரதி நிதிகள் அரசியல் தலைமைத் துவத்தை மேன்மை பொருந்திய தாக எண்ணுவதுடன் மக்கள் அதைப் பயனுள்ள வாழ்க்கைத் தொழிலாகக் கருத வேண்டும்.

"தற்போதிருக்கும் நல்ல ஆட்சி முறை சிங்கப்பூரில் தொடருமா என்பது ஒவ்வொரு சிங்கப்பூரரின் கையில்தான் இருக்கிறது," என்றார் அவர்.

"மாறிவரும், தொடர்ந்து அதி கரிக்கும் குடிமக்களின் எதிர் பார்ப்புகள், தொழில்நுட்பம், சமூக ஊடகங்களின் தாக்கம் ஆகிய வற்றால் ஆட்சியைப் பிடிப்பதற் கும் ஆட்சி செய்வதற்கும் அரசியல் தலைவர்கள் அதிக மான சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்," எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விரு நடைமுறைகள் குறித்து முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ஜான் மேஜரும் 'மக் களாட்சிக்கான நவீன சவால்கள்' எனும் தலைப்பிலான கருத்தரங் கில் தமது உரையாடலின்போது குறிப்பிட்டார்.

கொள்கை ஆய்வுக் கழகமும் லீ குவான் இயூ பொதுக் கொள்கைப் பள்ளியும் இணைந்து ஷங்ரிலா ஹோட்டலில் இந்தக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.